சுருக்கம்

சிறுபான்மையினர் நலன் – உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் – பதிவு பெற்ற உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு தொழிற்கல்வி பட்டப்படிப்பு, தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு மற்றும் இதர பட்ட மேற்படிப்புகளுக்கு தற்போது ஆண்டுதோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையுடன் கூடுதலாக ரூ.2000/– உயர்த்தி வழங்குதல் – அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(எஸ்1)த்துறை

அரசாணை (நிலை) எண்.47

நாள்:04.09.2015
மன்மத வருடம், ஆவணி 18
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.74, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(எஸ்1)த்துறை, நாள் 24.08.2009.
2. அரசாணை (நிலை) எண்.103, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ஜ1)த்துறை, நாள் 25.03.2013.
3. அரசாணை (நிலை) எண்.66, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந3)த்துறை, நாள் 01.10.2014.
4. சிறுபான்மையினர் நலத்துறை ஆணையரின் கடித எண்.பி3/1748/2015, நாள் 16.06.2015.

*****

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் மதரஸாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள் / ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் இதர பணியாளர்கள், தர்காக்கள் மற்றும் அடக்கஸ்தலங்கள், தைக்காக்கள், ஆஷூர்கானாக்கள் மற்றும் முஸ்லிம் அனாதை இல்லங்கள் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் முஜாவர் உள்ளிட்ட 18 வயது நிரம்பிய 60 வயதுக்குமேற்படாத நபர்களை உறுப்பினர்களாகக் கொண்டு "உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்" அமைத்தும், வாரியத்தில் உறுப்பினர் சேர்த்தல் மற்றும் உறுப்பினர்களுக்கு நல உதவிகள் வழங்கவும், அமைப்புச் சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்குவது போன்று கல்வி உதவித் தொகைகள் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களில் பதிவு பெற்றத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தொழிற்கல்வி பட்டப்படிப்பு, தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு மற்றும் இதர பட்ட

மேற்படிப்புகளுக்கு தற்போது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையுடன் கூடுதலாக ரூ.2000/– வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சீர்மரபினர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு தொழிற்கல்வி பட்டப்படிப்பு, தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு மற்றும் இதரப் பட்ட மேற்படிப்புகளுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையுடன் கூடுதலாக ரூ.2000/– உயர்த்தி வழங்க அனுமதி அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர் அவர்கள் மேலே இரண்டாவது மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணையிடப்பட்டுள்ளதைப் போன்று இத்துறையின் கீழ் செயல்படும் உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு தொழிற்கல்வி பட்டப்படிப்பு, தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு மற்றும் இதரப் பட்ட மேற்படிப்புகளுக்கு தற்போது ஆண்டுதோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையுடன் கூடுதலாக ரூ.2000/– உயர்த்தி வழங்கக் கோரி அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

5. சிறுபான்மையினர் நலத்துறை ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு தொழிற்கல்வி பட்டப் படிப்பு, தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு மற்றும் இதர பட்ட மேற்படிப்புகளுக்கு தற்போது ஆண்டுதோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையுடன் கூடுதலாக ரூ.2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) உயர்த்தி வழங்கி ஆணையிடுகிறது. இவ்வாறு கல்வி உதவித் தொகையினை உயர்த்தி வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை இவ்வாரியத்திற்கான ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண்.49194/பி,மிபி/2015, நாள் 02.09.2015–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அருள்மொழி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர், சென்னை–2.
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர், சென்னை–5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
அரசு முதன்மைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை, சென்னை–9.

அரசு முதன்மைச் செயலாளர், வருவாய்த்துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், உயர்கல்வித் துறை, சென்னை–9.
ஆணையாளர், தொழிலாளர் நலத்துறை, சென்னை–6.
ஆணையாளர், சிறுபான்மையினர் நலன், சென்னை–2.
ஆணையாளர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை–9.
முதன்மைச் செயல் அலுவலர்,
உறுப்பினர்–செயலர், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், சென்னை–1.
முதலமைச்சரின் செயலர், சென்னை–9.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
நிதி (வரவு–செலவு, பொது–I,II) / பி,மிபி / வருவாய் /
உயர்கல்வி / பள்ளிக் கல்வி)த்துறை, சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
தலைமைச் செயலரின் தனிச் செயலாளர், சென்னை–9.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்